"உடன்பிறப்பே வா"

# புதுச்சேரி மற்றும் புதுச்சேரி - காரைக்கால் மாநில தி.மு.கழக உறுப்பினர் சேர்க்கை!

## பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு



ஒன்றிய பா.ஜ.க. அரசின் பாசிச ஆதிக்கத்திலிருந்தும், அதற்கு துணை நிற்கும் புதுச்சேரி பா.ஜ.க. கூட்டணி அரசிடமிருந்தும் மாநிலத்தை மீட்டு, புதுச்சேரியின் 'மண் - மொழி - மானம்' காக்க, கழகத்தின் சார்பில் **"உடன்பிறப்பே வா"** பரப்புரை முன்னெடுக்கப்படும்.

புதுச்சேரியின் 30 சட்டமன்ற தொகுதிகளிலும் உள்ள அனைத்து வாக்குச் சாவடிகளிலும் வீடு வீடாகச் சென்று மக்களைச் சந்தித்து, பாசிச பா.ஜ.க. கூட்டணி ஆட்சியின் அவலங்களைச் சொல்லி, ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் குறைந்தபட்சம் 30% வாக்காளர்களைக் கழக உறுப்பினர்களாகச் சேர்க்க வேண்டும்.

இப்பணியை ஒருங்கிணைத்துச் செயலாற்ற, கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் **எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி.**, அவர்கள் தலைமைக் கழகத்தால் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

**புதுச்சேரி மற்றும் புதுச்சேரி-காரைக்கால் மாநிலக் கழகத்தின் மாநில - தொகுதி - வட்ட - ஊர்க்கிளை, உட்கிளை கழகச் செயலாளர்கள் என அனைவரும் உறுப்பினர் சேர்க்கை இயக்கத்தில் முழு மூச்சோடு இணைந்து பணியாற்றி, மாநிலத்தின் 30% வாக்காளர்களைக் கழக உறுப்பினராக்கிட வேண்டும் என்ற இலக்கை அடைந்திட வேண்டும்.**

"அண்ணா அறிவாலயம்"
சென்னை – 600 018.
நாள் : 26.09.2025.

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.



முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று (27.9.2025), காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் புதுச்சேரி மற்றும் புதுச்சேரி – காரைக்கால் மாநில தி.மு.கழக உறுப்பினர் சேர்க்கை பணியினை ஒருங்கிணைத்துச் செயலாற்ற, தலைமைக் கழகத்தால் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., அவர்கள் நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். அதுபோது, கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, துணைப் பொதுச்செயலாளர்கள் ஆ.இராசா, எம்.பி., கனிமொழி கருணாநிதி, எம்.பி., உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன் ஆகியோர் உடனிருந்தனர்.

இன்று (28ஆம் தேதி) திருப்பத்தூரில்

# சிவகங்கை மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிவிப்பு!

சிவகங்கை, செப்.28-

இன்று (28ஆம் தேதி) திருப்பத்தூரில் சிவகங்கை மாவட்டக் கழகச் செயற்குழு கூட்டம் நடைபெறுகிறது. இது குறித்து சிவகங்கை மாவட்டக் கழக செயலாளர், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:-

இன்று (28ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணி அளவில் திருப்பத்தூரில் சிவகங்கை சாலையில்



உள்ள ராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் மாவட்ட கழக செயற்குழு கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் வழக்கறிஞர் அ. கணேசன் தலைமையில் காலை 10.மணிஅளவில் நடைபெறுகிறது.

இந்த கூட்டத்தில் கீழ்கண்ட பொருட்கள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது.

நாளை (29ஆம் தேதி திங்கட்கிழமை தமிழக முதல்வர், கழக தலைவர் தளபதி அவர்கள் ராமநாதபுரம் மாவட்டத்தில் சுற்றுப் பயணம் மேற்கொள்வதில் சிவகங்கைமாவட்ட கழகத்தின் சார்பில் வரவேற்பு அளிப்பது குறித்து

திருத்தப்பட்டியல் குறித்து.

கழக வளர்ச்சி பணிகள்.

இந்த செயற்குழு கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் ,சார்பு. அணி நிர்வாகிகள், பாகமுகவர்கள் , உள்ளாட்சி பிரதிநிதிகள் ஆகியோர் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இத்தகவலை மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான கே.ஆர்.பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

உச்சநீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதால் – புதிய வக்ஃப் திருத்தச் சட்டத்தின்படி

# வக்ஃப் வாரியம் திருத்தி அமைக்கப்பட மாட்டாது!

## அமைச்சர் சா.மு.நாசர் திட்டவட்டம்!


சென்னை, செப். 28-

"வக்ஃப் சட்டத்திருத்தம் தொடர்பான வழக்கு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால், இவ் வழக்கில் இறுதித் தீர்ப்பு வரை, ஒன்றிய அரசு அவசர அவசரமாக நடைமுறைப்படுத்திய புதிய வக்ஃப் திருத்தச் சட்டத்தின்படி வக்ஃப் வாரியம் திருத்தி அமைக்கப்பட மாட்டாது" என்று சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் சா.மு. நாசர் அறிக்கை வருமாறு:-

1995 ஆம் ஆண்டு வக்ஃப் சட்டத்தினை ஒன்றிய அரசு திருத்தம் செய்து, ஒருங்கிணைந்த வக்ஃப் மேலாண்மை, அதிகாரமளித்தல், செயல் திறன் மற்றும் மேம்பாட்டுச் சட்டம், 1995னை 08.04.2025 அன்று நடைமுறைப்படுத்தியது.

இச்சட்டத்திற்கு திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து எதிர்ப்புத் தெரிவித்து உச்சநீதிமன்



றத்திலும் வழக்குத் தொடுத்தது. இதே போல் பல்வேறு தரப்பினரும் இச்சட்டத்தினை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். இவ் வாறு தொடுக்கப்பட்ட இவ்வழக்கில் உச்சநீதிமன்றம் 15.09.2025 அன்று இடைக்கால தீர்ப்பு வழங்கியுள்ளது.

தற்போது, மேற்கண்ட வக்ஃப் சட்ட திருத்தம் தொடர்பான வழக்கு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால், இவ்வழக்கில் இறுதி தீர்ப்பு வரும் வரை, ஒன்றிய அரசு அவசர அவசரமாக நடைமுறைப்படுத்திய புதிய வக்ஃப் திருத்தச் சட்டத்தின் படி, வக்ஃப் வாரியம் திருத்தி அமைக்கப்பட மாட்டாது.

இவ்வாறு அவ்வறிக்கையில் அமைச்சர் சா.மு.நாசர் குறிப்பிட்டுள்ளார்.

புதுடெல்லியில் நடைபெற்றது!

# காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் 44வது கூட்டம்!

## நீர்வளத்துறைச் செயலாளர் ஜெ.ஜெயகாந்தன் ஐ.ஏ.எஸ், கலந்து கொண்டார்!

புதுடெலி, செப். 28-

புதுதில்லியில் நேற்று முன்தினம் எஸ்.கே.ஹல்தார் அவர்கள் தலைமையில் நடைபெற்ற காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் 44வது கூட்டத்தில் தமிழ்நாடு உறுப்பினர் மற்றும் அரசு செயலாளர், நீர்வளத்துறை ஜெ.ஜெயகாந்தன், மற்றும் இரா.சுப்பிரமணியம், தலைவர், காவிரி தொழில்நுட்பக் குழுமம் மற்றும் பன்மாநில நதி நீர்ப் பிரிவு ஆகியோர் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலி காட்சி வாயிலாக கலந்து கொண்டார்கள்.

தமிழ்நாடு உறுப்பினர், தற்பொழுது (25.09.2025) மேட்டூர் அணையின் நீர் இருப்பு 92.105 டி.எம்.சி ஆக உள்ளது என்றும், அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 8,419 கன அடியாக உள்ளது என்றும் அணையிலிருந்து வினாடிக்கு 9,033 கன அடி நீர் விவசாயம், குடிநீர் மற்றும் தொழிற்சாலை பயன்பாட்டிற்காக திறந்துவிடப்படுகிறது என்றும் தெரிவித்தார். மேலும், கர்நாடக அணைகளின் நீர் இருப்பு மற்றும் நீர் வரத்து கணிசமான அளவு தொடர்ந்து வருவதினாலும், தமிழகத்திற்கு 2025, அக்டோபர் மாதத்திற்கு வழங்கப் படவேண்டிய நீர் அளவான 20.22 டி.எம்.சி. நீரினை உச்சநீதிமன்ற ஆணையின்படி கர்நாடகம் பில்லிகுண்டுலுவில் உறுதிசெய்யுமாறு ஆணையத்தை வலியுறுத்தினார்.

மக்கள் நலன் சார்ந்த திட்டங்களை நாளும் நடைமுறைப்படுத்தும்

# 'திராவிட மாடல்' அரசு - 2026 தேர்தலிலும் அமோக வெற்றி பெற உறுதியேற்போம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு – இனமானப் பேராசிரியரின் புதல்வர் அ.அன்புச்செல்வன் கடிதம்!

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, இனமானப் பேராசிரியர் அவர்களின் புதல்வர் அ.அன்புச் செல்வன் நேற்று முன்தினம் எழுதியுள்ள கடிதம் வருமாறு:-**



அன்பு நண்பர் முதல்வர் ஸ்டாலின் அவர்களுக்கு,

இனிய வணக்கம்.

'கல்வியில் சிறந்த தமிழ்நாடு' விழாவினை தெலுங்கானா முதலமைச்சர் ரேவந்த் ரெட்டியைக் கொண்டு நடத்தியமைக்கு மிகுந்த பாராட்டுகள்!.

நிகழ்காலத் தமிழர்க்கு ஏற்றம் தரும் திட்டங்களைப் போல கல்விக்குச் செயல்படுத்தப்படும் திட்டங்கள், வளமான தமிழகத்தை உருவாக்கும் பெரும் முயற்சியாகும்.

இப்பெரும் முயற்சியில் ஈடுபட்டுள்ள இரு அமைச்சர்களுக்கும், உங்களது மேலான ஆலோசனையை ஏற்று நிதி ஒதுக்கீடு செய்யும் நிதி அமைச்சருக்கும் இனமானப் பேராசிரியர் இல்லத்து வாழ்த்துகள்! பாராட்டுகள்!

கடந்த 70 ஆண்டுகளில் கல்வி போன்ற சமூக முதலீடு களில் கவனம் செலுத்தியதன் மூலமே தமிழ்நாடு வளர்ந்த மாநிலமாக முன்னேறியுள்ளது.

"கேடில் விழுச்செல்வம் கல்வியொருவற்கு மாடல்ல மற்றையவை" எனும் திருக்குறள் வழிக் கல்விக்கு நிதிநிலை அறிக்கையில் அதிக முதலீடு செய்வதற்குப் பாராட்டுகள்!.

"ஒருவருக்கு அழியாத சிறந்த செல்வம் கல்வியே!" என்றும், "கல்வி தவிர மற்ற பொருட் செல்வங்கள் யாவும் சிறந்த செல்வம் ஆகாது" என்றும் கூறுகிறது குறள். கல்வி மட்டுமே நிலையான, அழியாத செல்வமாகும்; மற்ற செல்வம் யாவும் நிலையற்றது என்பதே இக்குறளின் கருப்பொருள்.

**"மானமும் அறிவும் மனிதர்க்கு அழகு" என் பார் தந்தை பெரியார், தமிழகத்தை வஞ்சிக்கும் ஒன்றிய அரசுடன் திராவிட இயக்கத்தின் மூலக் கொள்கைகளுக்கு எவ்வித பங்கமும் ஏற்படாமல் சிறிதும் அச்சப்படாமல், துணிச்சலுடன் தமிழக மக்களின் தன்மானத்தைக் காப்பவர் தாங்கள். இத்தகைய கொள்கைப் பிடிப்பும், அதனால் ஏற்படும் துணிவும், செம்மொழி நாயகரான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முதன்மைத் தொண்டரான முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினான தங்களது ரத்த அணுக்களிலும் நிறைந்து வெளிப்படுவது இயல்பே!**

அறிவை வளர்ப்பதில் கல்வியின் பங்கு அளப்பரியது. கடந்த 70 ஆண்டுகளாக கல்வியை பரவலாக எல்லோரும் எளிதில் கற்க கண்ணும் கருத்துமாக இயங்குவது திராவிட இயக்கம்.

அறிவுசார் பொருளாதாரத்தை நோக்கி வேகமாக தமிழ்நாடு நகர்கிறது. அதற்கேற்ப மாணவர்களின் கல்வித்தரம் மாற்றலுக்குத் தயாராகும் வகையில் பாடத்திட்டத்தில் மாற்றங்களைக் கொண்டு வந்து, நவீன தகவல் தொழில் நுட்பங்களின் அடிப்படையில் கற்பித்து, மாணவர்கள் சுயமாகக் கற்க உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 22,931 திறன் மிகு வகுப்பறைகள் உருவாக்கப் பட்டுள்ளன.

நம் மாநிலத்தின் கல்வி வளர்ச்சி மற்றும் எதிர்காலத் தேவைகளுக்கு ஏற்ப தமிழகத்திற்கு என்று தனித்துவமான கல்விக் கொள்கையை வகுக்க கல்வியாளர்கள் மற்றும் வல்லுநர்களைக் கொண்ட குழு அமைத்து தமிழகத்திற்கு என்று தனித்துவமான கல்விக் கொள்கைகளை அறிமுகப்படுத்தியதை வரவேற்கின்றேன்!. காலத்தின் தேவையறிந்து எடுக்கப்பட்ட சீரிய நடவடிக்கை இது!.

**'முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின்' வெற்றியானது இன்று இந்தியா முழுவதும் பேசும் பொருளாகியுள்ளது. இந்திய மாநிலங்கள் மட்டுமல்ல; கனடா, இந்தோனேஷியா போன்ற உலக நாடுகளும் இத்திட்டத்தை அமல்படுத்தத் திட்டமிடுகின்றனர், அந்த அளவுக்கு இத்திட்டம் வெற்றி பெற்றுள்ளது என்றால், அது மிகையல்ல.**

இடைநிலைக் கல்வி, பள்ளிக் கல்வி, கல்லூரிக் கல்வி, பொறியியல், மருத்துவம், விவசாயக் கல்வி, சட்டப் படிப்பு, கால்நடை மருத்துவம் என அனைத்து உயர் கல்விகளிலும் உச்ச நிலையை எட்டியுள்ளது திராவிட மாடல் அரசு.

இத்தகைய கல்வி பயின்றவர்கள் அவர்தம் திறனையும் மேம்படுத்தினால் அவர்கள் வாழ்வில் முன்னேற முடியும் என்பதனால்தான் 'நான் முதல்வன்', 'தமிழ்ப் புதல்வன்', 'புதுமைப்பெண்' உள்ளிட்ட 7 திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறீர்கள்.

நாட்டிற்கே முன்னோடியாக விளங்கும் இவ்வியத்தகு திட்டங்கள் பல நல்ல விளைவுகளை ஏற்படுத்தி உள்ளது, சில புள்ளி விவரங்கள் இத்திட்டத்தின் வெற்றிக்குச் சாட்சியாக விளங்குகிறது.

2.57 லட்சம் குழந்தைகள் இந்த ஆண்டு 'தமிழ்ப் புதல்வன்' மற்றும் 'புதுமைப்பெண்' திட்டத்தில் பயன்பெற உள்ளனர்.

14.60 லட்சம் பேர் 'நான் முதல்வன்' திட்டத்தில் கலந்து கொண்டு அவர்களுக்கு 41 லட்சம் திறன் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளது.

500க்கும் மேற்பட்ட திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டங்களால் ஆண்டுக்கு 1 லட்சம் பேருக்குக் கூடுதலாக அவர்கள் பயிலும் வளாகத்திலேயே பன்னாட்டு நிறுவனங்கள் மூலம் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வேலை வாய்ப்புகள் கிட்டியுள்ளது.

**2026-ஆம் ஆண்டு 'திராவிட மாடல் 2.0' ஆட்சியில் கல்வியை ஒத்திசைவுப் பட்டியலில்** (Concurrent list) **இருந்து மீட்டு மீண்டும் மாநிலப் பட்டியலுக்கு** (State List) **கொண்டுவரும் சட்டப் போராட்டங்களையும் முன்னெடுக்க வேண்டுமெனவும் கோருகிறேன்.**

மக்கள் நலன் சார்ந்த திட்டங்களை நாளும் அமல் படுத்தும் திராவிட மாடல் அரசு, 2026 சட்டமன்றத் தேர்தலிலும் அமோக வெற்றி பெற உறுதியேற்போம்!.

**ஓரணியில் தமிழ்நாடு!**

**தமிழ்நாட்டைத் தலைகுனிய விடமாட்டோம்!**

**படைப்போம் வரலாறு!**

**வளர்க தங்கள் தமிழர் தொண்டு!**

**வெல்க திராவிட மாடல் அரசு!**

**வளர்க தி.மு.க.!**

இவண்,

**அ. அன்புச்செல்வன்**

26.09.2025

இவ்வாறு அக்கடிதத்தில் அ.அன்புச் செல்வன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.